**செய்தி வெளியீடு எண்:52** **நாள்:13.05.2021**

**நிதி (வழிவகைகள்–II)த் துறை**

**<u>செய்தி வெளியீடு</u>**

தமிழ்நாடு அரசு மொத்தம் **ரூபாய் 3000.00 கோடி** மதிப்பில், **முப்பது ஆண்டுக்காலங்களுக்கு ரூபாய் 1500.00 கோடி** மற்றும் **முப்பத்து ஐந்து ஆண்டுக்காலங்களுக்கு ரூபாய் 1500.00 கோடி** மதிப்புள்ள **பங்குகள் வடிவிலான** பிணையப் பத்திரங்களை ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவிருப்பதாக அறிவித்துள்ளது. இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள – கோட்டை அலுவலகத்தில் **மே 18, 2021** அன்று நடத்தப்படும். போட்டி ஏலக் கேட்புகள் முற்பகல் **10.30** மணியிலிருந்து **11.30** மணிக்குள்ளாகவும், போட்டியற்ற ஏலக் கேட்புகள் முற்பகல் **10.30** மணியிலிருந்து **11.00** மணிக்குள்ளாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் [Reserve Bank of India Core Banking Solution(E-Kuber) System] மின்னணு படிவத்தில் (Electronic format) **மே 18, 2021** அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்
நிதித்துறை, சென்னை–9.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**